# ஈழநாதம்

Eelanatham — மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - iv

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | மாசி - 30 | 14-03-2003 | வெள்ளிக்கிழமை | ஓசை 24



படப்பிடிப்புகளுக்கு நாடவேண்டிய இடம்

தாசன் போட்டோ அன் வீடியோ

பிரதான வீதி.
இராமநாதபுரம். கிளிநொச்சி




## அரசியல் ஆலோசகர்-கெல்ஹேசன் கிளிநொச்சியில் சந்தித்துப் பேச்சு

(அலுவலக செய்தியாளர்)

நோர்வே அரசின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் கெல்ஹேசன் உட்பட ஐவர் கொண்ட குழுவினர் நேற்று நண்பகல் 12.15 மணிக்கு வருகை மேற்கொண்டு அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்களை விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

விடுதலைப் புலிகளின் சரக்குக் கப்பல் சர்வதேசக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரால் மூழ்கடிக்கப்பட்டு பதினொரு போராளிகள் வீரச்சாவடைந்த சம்ப வம் பற்றியும், இதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் குறித்தும், தற்போதைய அரசியல் நிலை குறித்தும், எதிர்வரும் பேச்சு வார்த்தை குறித்தும் கலந்துரையாடப் பட்டதாகத் தெரியவருகின்றது.

இக்கலந்துரையாடலில் விடுதலைப் புலிகளின் தரப்பில் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்களும், தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களும், திருமதி அடேல் பாலசிங்கம் அவர்களும் கலந்து கொண்டனர்.

நோர்வே அரசு தரப்பில் நோர்வே அரசின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் கெல்ஹேசன், இலங்கைக்கான தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் மற்றும் தூத

(IVஆம் பக்கம் பார்க்க)

### ● ரெலிவ்சன் ● கெல்ஹேசன் சந்திப்புக் குறித்து

# தலைவர் பிரபாகரனுடன் ஆலோசித்தபின்பே யப்பான் பேச்சுக்கள் குறித்து முடிவு!

## அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்

**"யப்பானில் நடைபெறவுள்ள அடுத்த கட்டப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வது பற்றி நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சருடனும், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவருடனும் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் குறித்து தலைவர் பிரபாகரனுடன் கலந்தாலோசித்த பின்னர் இறுதி முடிவெடுக்கப்படும். இம்முடிவை இன்னும் இரண்டொரு தினங்களில் எடுப்போம்" என்று புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தெரிவித்தார்.**

நேற்று நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெலல்கேசனுடனான சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய போதே அன்ரன் பாலசிங்கம் அவர்கள் இவ்வாறு தெரிவித்தார்.

**கேள்வி:** இச்சந்திப்பின்போது முக்கியமாக கலந்துரையாடப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக தங்கள் கருத்துக்கள்,

குறிப்பாக இன்றைய சந்திப்பில் தற்போதைய அரசியல் நிலைமை பற்றியும், சமீபத்தில் திருகோணமலை ஆழ்கடலில் நடந்த துயர

(IVஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தின் மிரட்டல் மத்தியில் வவுனியாவில் பூரண கதவடைப்பு

(வவுனியா செய்தியாளர்)

சர்வதேசக் கடற்பரப்பில் பயணித்துக் கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் சரக்குக் கப் பலை புரிந்துணர்வு உடன்படிக்கை க்கு மாறாக சிறிலங்கா கடற்படை யினர் வழிமறித்து தாக்கி அழித்த சம்பவத்தைக் கண்டித்தும் அச்சம்பவத்தில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட போராளிகளுக்கு வீரவணக்கம் தெரிவித்தும் வவுனியாவில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இக் ஹர்த்தாலை அனுஷ்டிக்கக்கூடாது என

(IVஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் மீதான நடவடிக்கைகளுக்கு எதிராக திருமலையில் ஹர்த்தால்

தமிழ் மக்களுக்கு எதிரான அனைத்து சதி நடவடிக்கை களையும் கண்டித்து இன்று திருகோணமலையில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப் படவுள்ளதாக திருமலை வாழ் தமிழ் மக்கள் இதற்கான கோரிக்கையை விடுத்துள்ளனர்.

அவசர காலச் சட்டம், பயங்கரவாத தடைச் சட்டம் என்பன நீக்கப்பட்ட பின்னரும் தமிழ் மக்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதைக் கண்டித்தும், களுத்துறை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் சாத்வீகப் போராட்

(IVஆம் பக்கம் பார்க்க)

## துணுக்காய் வலய தொ. ஆசிரியர்கள் இன்று பேரணிகள் நடத்த முடிவு!

(மல்லாவி)

துணுக்காய் வலய தொண்டர் ஆசிரியர் ஒன்றியம் வடக்கு - கிழக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கக்கோரி இன்று வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

இப்பேரணி கல்விக்கோட்ட ரீதியாக நடைபெறவுள்ளது. துணுக்காய் கோட்டத்தில் இடம்பெறவுள்ள பேரணியானது மல்லாவி மத்திய கல்லூரியில் ஆரம்பமாகி துணுக்காய் உ.அ.அ. பணிமனை நோக்கியும், பாண்டியன்குளம் கல்விக் கோட்டத்தில் இடம்பெறவுள்ள பேரணி உ.அ.அ. பணிமனை நோக்கியும், ஒட்டுசுட்டான் கல்விக் கோட்டத்தில் இடம்பெறவுள்ள பேரணியானது கற்சிலைமடு அ.த.க. வித்தியாலயத்தில் ஆரம்பமாகி ஒட்டுசுட்டான் உ.அ.அ

(IVஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. மனித உரிமைகள் ஆ.குழுத் தலைவர் காவல்துறைப் பொறுப்பாளருடன் சந்திப்பு!

(அலுவலக செய்தியாளர்)

ஐ.நா.மனிதஉரிமைகள் ஆணைக் குழுத் தலைவர் நேற்றுக் காலை தமிழீழக் காவல்துறையினருடன் மனித உரிமைகள் பேணுதல் தொடர்பாக விரிவான கலந்துரையாடல் ஒன்றினை நடாத்தினார்.

மேற்படி கலந்துரையாடல் நேற்றுப் பகல் 10.30 மணியளவில் கிளிநொச்சியில் நடைபெற்றது.

தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் அவர்களுடன் தமிழீழ காவல்துறையின் சட்ட ஆலோசகர் கலாநிதி சோமாஸ்கந்தன் ஆகியோர் ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுத் தலைவர் இயன் மாட்டின் அவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். இதன்போது குற்றச்செயல்களை புலன்விசாரணை செய்யும் போது மனித உரிமைகளை எவ்வாறு பேணலாம் என்பது தொடர்பாகவும், உலக நாடுகளில் எவ்வாறு மனித உரிமைகள் பேணப்படுகின்றன என்பது தொடர்பாகவும் இரு தரப்பினரும் கலந்துரை

(IVஆம் பக்கம் பார்க்க)



ஐ.நா.மனித உரிமைக் குழுத்தலைவருக்கு காவல் துறைப் பொறுப்பாளர் நினைவுப்பரிசில் வழங்குகிறார்.

# "வேர்கள் துளிர்க்கும்" சிறப்புற நடந்த வெளியீடு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சியில் கப்டன் வானதி வெளியீட்டகத்தின் மூன்றாவது வெளியீடான வேர்கள் துளிர்க்கும் சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழாவும், கலை இலக்கியப் போட்டிக்கான பரிசளிப்பு விழாவும் நேற்று முன்தினம் சிறப்புற நடைபெற்றது.

கிளிநொச்சி மகா வித்தியாலய மண்டபத்தில் மாலை நான்கு மணியளவில் செல்வி தனுசியா மகேந்திரன் தலைமையில் இடம்பெற்றது. முதல் நிகழ்வாக வெளியீட்டு உரையினைப் போராளி எழுத்தாளரான புரட்சிகா நிகழ்த்தினார். அடுத்து குட்டிசிறி மோட்டார் படைப்பிரிவுப் பொறுப்பாளர் பவநிதி முதற்பிரதியை வெளியிட்டு வைக்க பிரதியை எழுத்தாளர் தாமரைச்செல்வி பெற்றுக் கொண்டார்.

படைப்பாளிகளுக்கான பிரதிகளைத் தேசிய மகளிர் படையணிப் பொறுப்பாளர் கோதை அவர்கள் வழங்கினார். அடுத்து சிறப்புரையினை தமிழீழ மகளிர் அரசியல்துறை பொறுப்பாளர் தமிழினி நிகழ்த்தினார்.

வானதி வெளியீட்டகத்தினால் 2002ஆம் ஆண்டு மாலதி நினைவு தினத்தையும், தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளையும் முன்னிட்டு நடாத்தப்பட்ட கலை இலக்கியப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை வானதி வெளியீட்டகப் பொறுப்பாளர் உலகமங்கை அவர்கள் வழங்கிக் கௌரவித்தார்.

அடுத்து மதிப்பீட்டு உரையினை ஆதிலட்சுமி சிவகுமார் தமிழீழ ஆய்வு நிறுவனப் பொறுப்பாளர் சுதாமதி ஆகியோர் நிகழ்த்தினர். (பா)





வவுனியா சிதம்பரபுரம் ஸ்ரீநாகராஜா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வவுனியா தெற்கு வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. பொன்னையா உரையாற்றுவதனையும், . சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்ட பாங்கொக் பல்கலைக்கழக மாணவர்கள், சிதம்பரபுரம் ஸ்ரீநாகராஜா வித்தியாலய மாணவர்களுடன் கயிறு இழுத்தல் போட்டியில் பங்கு பற்றுவதனையும் படங்களில் காணலாம்.

படப்பிடிப்பு:- ஆ.சு. பாஸ்கரன், வவுனியா செய்தியாளர்

## ஆனையிறவில் வெடி பொருட்கள் நேற்றுமுன்தினம் அழிக்கப்பட்டன!

(அலுவலகச்செய்தியாளர்)

ஆனையிறவை அண்டிய பகுதிகளில் மனிதநேய கண்ணி வெடி அகற்றும் பிரிவினரால் மீட்கப்பட்ட வெடிபொருட்கள் தகர்த்து அழிக்கப்பட்டன.

நேற்று முன்தினம் பகல் ஒரு மணியளவில் ஏ-9 போக்குவரத்தில் ஈடுபட்ட வாகனங்களையும் மக்களையும் இடைநிறுத்திவிட்டு வெடிபொருட்கள் அழிக்கப்பட்டதன. இதன் பின்னர் போக்குவரத்திற்கு அனுமதிவழங்கப்பட்டது.

## சிறுபோக உழவின்போது வைக்கோலைப் பயன்படுத்துக

தற்போது காலபோக அறுவடை முடிந்து வருவதால் அடுத்து வரும் சிறுபோகத்திற்காக நிலத்தைப் பண்படுத்தும்போது வைக்கோலைப் பயன்படுத்தும்படி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், விவசாயத் திணைக்களமும் கேட்டுக் கொள்கிறது. நிலம் பண்படுத்துகையில் மண் ஈரத்துடன் முதலாம் உழவை உழுதல் வேண்டும். உழுத பின்னர் அறுவடை செய்த வைக்கோலை எல்லாப் பாத்திகளிலும் சமபங்காகப் பரவ வேண்டும்.அவ் வைக்கோலின் மேல் யூரியா உரக்கலவையைத் தூவி நன்கு நீர் ஊற்ற வேண்டும். இவ்வாறு செய்து 10- 15 நாட்களின் பின்னர் இரண்டாம் உழவை உழுதல் சாலவும் சிறந்தது. இரண்டாம் உழவின்போது முன்பு குவிக்கப்பட்டு உக்கிய வைக்கோலை நன்கு பரவி உழ வேண்டும். இதன்போது தேவையான அளவு இயற்கை உரங்களையும் சேர்த்து உழுவது நல்லது.இரண்டாம் உழவு உழுது 15 நாட்களின் பின் நெல்லை விதைக்க வேண்டும்.

இவ்வாறு வயலுக்கு வைக்கோல் பரவி உழுவதனால் ஏக்கருக்கு 15-20 புசல் விளைவு அதிகரிக்கும். அத்துடன் மண்வளம் அதிகரிப்பதோடு, மண்ணின் ஈரத்தன்மையும் பாதுகாக்கப்படும். நெற்பயிர் வளர்ச்சிக்கு சிலிக்கா ஓரளவு தேவையாக இருப்பதால் அதனை வைக்கோலில் இருந்து பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். இவற்றைக் கருத்தில் கொண்டே உழவுக்காக வைக்கோலைப் பயன்படுத்துமாறு விவசாயிகள் வேண்டப்படுகின்றார்கள்.

## திலீபன் மருத்துவ சேவை ஓராண்டுப் பூர்த்தி

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் திலீபன் மருத்துவமனையின் ஓராண்டு நிறைவு விழா நடைபெற்றது. கடந்த செவ்வாய்க் கிழமை மாலை 3.00 மணியளவில் திலீபன் மருத்துவ மனையின் அபிவிருத்திக் குழுத் தலைவர் மு.சிவநேசன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்புரைகளை கற்சிலைமடு அ.த.க பாடசாலை அதிபர் பொ.அருமைச்சந்திரன், நா.வன்னியசிங்கம், திலீபன் மருத்தவ மனையின் சிறப்பு மருத்துவர் செல்வி வசந்தி மாலா, தமிழீழ சுகாதார சேவை துணைப் பொறுப்பாளர் தமிழ்வாணன், முல்லை மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்நிலவு, தமிழீழ ஊரக வளர்ச்சி திட்டப் பொறுப்பாளர் அன்பரசன் ஆகியோர் நிகழ்த்தினர். நன்றியுரையினை திலீபன் மருத்துவ மனையின் அபிவிருத்திக் குழு செயலாளர் வே.தயாபரன்(ஒட்டுசுட்டான் பிரதேச பொ.மே.நி இணைப்பாளர்) ஆற்றினார்.

இதுவரை 37547 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர். (05)

## சிறப்பாகச் சேமித்தோருக்கு கிராமிய அபிவிருத்தி வங்கி பரிசு

கிராமிய அபிவிருத்தி வங்கியின் முதலீட்டு சேமிப்புத் திட்டத்தில் இணைந்து சிறப்பான முறையில் சேமிப்பினை மேற்கொள்ளும் வழமைதாரர்களில் குலுக்கல் மூலம்தெரிவு செய்யப்படுபவர்களுக்கும் சிறப்பாகத்தெரிவு செய்யப்படுபவர்களுக்கும் வருடாந்தம் பரிசில்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தவகையில் இந்த வருடத்திற்குரிய தெரிவு நேற்று முன்தினம் கிராமிய அபிவிருத்தி வங்கி மத்திய செயலகத்தில் நடைபெற்றது.

இதில் பரிசு பெறுபவர்கள் விபரம் பின்வருமாறு.

சிறப்புப் பரிசுக்குரியவர் :- கிராமிய அபிவிருத்தி வங்கி வவுனியாக்கிளை கணக்கு இல.0149

☐ முதலாவது பரிசுக்குரியவர்:- கிராமிய அபிவிருத்தி வங்கி கிளிநொச்சிக் கிளை கணக்கு இல.0205

☐ இரண்டாவது பரிசுக்குரியவர்:- கிராமிய அபிவிருத்தி வங்கி வவுனியாக்கிளை கணக்கு இல.050

☐ மூன்றாவது பரிசுக்குரியவர் :- கிராமிய அபிவிருத்தி வங்கி வவுனியாக்கிளை கணக்கு இல.0217

பரிசுக்குரியவர்கள் உரிய கிளைகளுடன் தொடர்புகொண்டு பரிசில்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கிராமிய அபிவிருத்தி வங்கியின் செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விளையாட்டுப் போட்டி

(அலுவலக செய்தியாளர்)

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 1.00 மணிக்குப் பூநகரி ம.வி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் முதன்மை விருந்தினராக அரச அதிபர் தி.இராசநாயகம் அவர்கள் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## தே.எ. பேரவையின் சங்கம நிகழ்வு

முள்ளிவளை பிரதேசத்தில் உள்ள முள்ளியவளை கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் முதல் மாத சங்கம நிகழ்வு நாளை மு.ப.10.00 மணிக்கு முள்ளியவளை கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலக லெப். தீபன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி சங்கம நிகழ்வில் முள்ளியவளை பிரதேசக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் மற்றும் பிரதேசத்திற்குட்பட்ட சகல ஊரக எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (ஆ)


## முக்கிய அறிவித்தல்

எதிர்வரும் 18.03.2003 அன்று நடைபெறவுள்ள புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய ஆண்டுற்சவப் பொங்கலை முன்னிட்டு தற்காலிக வர்த்தக நிலையங்கள் அமைக்க உள்ளோர் அனைவரும் எமது வியாபார உரிம அனுமதியைப் பெற்றுச் செயற்படும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றேன்.

திரு. பொன் நித்தியானந்தன்,
விசேட ஆணையாளர்,
கரைச்சி பிரதேசசபை,
கிளிநொச்சி.

(சி-8015)

## எம்.எஸ்.எவ் [H] இன் வன்னிக்கான வைத்திய உதவி

மல்லாவியில் நடைபெற்று வந்த எம்.எஸ்.எவ் (ஒல்லாந்து) இன் வைத்திய சேவை 2003ஆம் ஆண்டு பங்குனி மாதம் 31ஆம் திகதியுடன் முடிவடைகிறது. மகப்பேறு, தாய், சேய் நலம் ஆகிய சேவையினை 2003 ஆம் ஆண்டுக்காக எம்.எஸ். எவ் (H) புதுக்குடியிருப்பில் தொடர்ந்து நடாத்தும் என்பதைத் தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும்.

திட்ட இணைப்பாளர்,
எம்.எஸ்.எவ்(H)

(3016)

## அலுவலக பாவனைக்கு கட்டடம் தேவை

புனரமைப்புப் பணிகளில் ஈடுபடவுள்ள வெளி நாட்டு நிறுவனம் ஒன்றிற்கு கிளிநொச்சி நகர சுற்றாடலில் கட்டட வசதி தேவை.

கணிசமான வாடகை செலுத்தப்படும். சிறு திருத்த வேலைகள் தேவைப்படின் நிறுவனம் பொறுப்பேற்று திருத்தம் செய்யும்.

கீழ்காணும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

வெளிக்கள தலைவர்,
ஜிரிசற் – யாழ். புனரமைப்புத் திட்டம்,
11, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலை பேசி : 2222238, 2222635.

(3018)

## துயர் பகிர்கின்றோம்

### திருமதி இரத்தினகாமி அழகு

கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரியின் ஆசிரியை திருமதி நிர்மலா கருணாதாச அவர்களின் அன்பு மாமியார் 08.03.2003 சனிக்கிழமை சிவபதமடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பணியாளர்கள்.
கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி.

(3017)

# சமாதான முயற்சிகளில் எழுந்துள்ள பிரச்சினை குறித்து ஆறாவது சுற்றுப் பேச்சில் ஆராயப்படும்

## - சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தெரிவிப்பு

**சமாதான முயற்சிகளில் எழுந்துள்ள பிரச்சினைகள் ஜப்பானில் நடைபெறும் ஆறாவது சுற்றுப் பேச்சுக்களில் விரிவாக ஆராயப்படும். அரசியல் ரீதியாக செயற்படாமல் நாட்டின் அபிவிருத்தி கருதி அனைவரும் ஒன்றாக உதவி செய்ய வேண்டும் என பிரதமர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

நேற்று முன்தினம் கண்டியில் ஐக்கிய தேசிய முன்னணி நடத்திய பேரணியின் முடிவில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரத்மர் இவ்வாறு கூறி யுள்ளார்.

தற்போது எவ்வாறாயினும் அதிகாரத்தை செயற்படுத்தும் முயற்சிகளைவிட அமைதிச் சூழலை கட்டிக்காப்பது முக்கிய மானது என அவர் சுட்டிக்காட்டி யுள்ளார். தற்போதைய சமாதான முயற்சிகளின் பெறுபேறுகளை இன்னும் இரண்டு ஆண்டுகளுக் குள் தெளிவாகக்காணமுடியும் என உறுதியளித்துள்ள பிரதமர் தற்போது நாட்டுக்குத் தேவைப் படுவது போரா? சமாதானமா? என்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என நாட்டு மக்களை சிறிலங்காப் பிரதமர் ரணில் விக் கிரமசிங்க மீண்டும் கேட்டுக் கொண்டுள்ளார்.

புரிந்துணர்வு உடன்படிக்கை யில் குறைபாடுகள் இருக்கின்றன. மிகவும் பொறுமையாக நடந்து கொண்டு அவற்றை அடைய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த 10ஆம் திகதி அரசாங் கத்திற்கெதிராக சமாதான முயற்சி களை எதிர்த்து சிறிலங்கா சுதந் திரக்கட்சியும், ஜே.வி.பி.யும் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி யையும் பொதுக்கூட்டத்தையும் நடத்தியிருந்தது தெரிந்ததே.

## மீண்டும் முல்லைத்தீவில்

1990ஆம் ஆண்டு இடப்பெயர்வு காரணமாக இதுகால வரையும் புதுக்குடியிருப்பில் இயங்கி வந்த முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பணிகள் எதிர்வரும்19ஆம்திகதி முதல் முல் லைத்தீவில் புதிதாக அமைக்கப் பட்ட பணிமனையில் நடைபெற வுள்ளது.

# தமிழ்க் கைதிகளின் வழக்குகளை துரிதமாக விசாரிக்குக

## – பிரதம நீதியரசர் பணிப்பு

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பான வழக்குகளைத் துரிதமாக விசாரித்து முடிக்குமாறு பிரதம நீதியரசர் மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கு உத்தரவிட்டுள் ளார்.

தமிழ் அரசியல் கைதிகள் பல்வேறு இடையூறுகளை எதிர்நோக்குவதாக பிரதம நீதியரசருக்கு அறிவித்துள்ள மையைத் தொடர்ந்து பிரதம நீதி யரசர் இந்த உத்தரவை விடுத் துள்ளார்.

தற்போது வெலிக்கடைச் சிறைச்சாலையில் இயங்கிவரும் பயங்கரவாதச் சம்பவங்கள் தொடர்பான வழக்குகளை விசா ரணை செய்யும் விசேட மேல் நீதி மன்ற நடவடிக்கைகளை இரவு எட்டு மணிவரை மேற்கொள்ளு மாறு பிரதம நீதியரசர் வெலிக் கடை மேல் நீதிமன்ற நீதிபதிக்கு உத்தரவு விடுத்துள்ளார்.

# மனநோயாளருக்குச் சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

மனநோயினால் பாதிக்கப்பட்ட நோயாளருக்கு எதிர்வரும் 18ஆம் திகதி கிளிநொச்சி முதலாம் கட்ட வைத்தியசாலையில் சிகிச்சை வழங்கப்படவுள்ளது.

அன்றையதினம் மனநோய் வைத்திய நிபுணர் டாக்டர் தயா சோமசுந்தரம் அவர்கள் நோயா ளர்களை பார்வையிடவுள்ளதால் இந்நோய்க்கு இலக்கானோர் தவறாது சமுகமளித்து சிகிச்சை பெறுமாறு முதலாம் கட்ட வைத் தியசாலை நிர்வாகத்தினர் கேட் டுள்ளனர். (அ)

# கிளிநொச்சி ஏ-9 வீதியில் மூன்று வீதி விபத்துக்கள்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி நகரை அண்டிய ஏ-9 பாதையில் மூன்று வீதி விபத்துக்கள் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

இரணைமடுச் சந்திக்கு அண்மையில் மண் ஏற்றிச் சென்ற பாரவூர்தி ஒன்றுடன் கயஸ் வாக னம் மோதியது. இதனால் கயஸ் வாகனம் பெரும் சேதமுற்றது.

155 ஆம் கட்டைப் பகுதியில் மண் ஏற்றும் பாரவூர்தி ஒன்று தடம் புரண்டதில் அதில் பயணம் செய்த ஒருவரும் சாரதியும் காயமடைந்துள்ளனர்.

கந்தசாமி கோயில் முன்பாக மோட்டார் சைக்கிள் ஒன்று துவிச்சக்கரவண்டியுடன் மோதிய தில் துவிச்சக்கரவண்டியில் பய ணம் செய்தவர் காயமடைந்த துடன் துவிச்சக்கரவண்டியும் பெரும்சேதம் அடைந்துள்ளது.(பா)

## - 25 பொ.ஐ.மு. பாராளு. உறுப்பினர்கள் -

# சனாதிபதியுடன் சேர்ந்து அரசமைக்க விரும்பவில்லை

## – திலக் மாரப்பன கூறுகிறார்

(கொழும்பு)

பொ.ஐ. முன்னணியைச் சேர்ந்த 25 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சனாதிபதியுடன் இணைந்து அரச மைக்க விரும்பவில்லை என படைத்துறையமைச்சர் திலக் மாரப்பன கூறியுள்ளார்.

நிகழ்வொன்றில் உரையாற்றும் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் கூறுகையில் தமது அரசாங்கத் திற்கு என்றுமில்லாதவாறு வெளி நாடுகளின் உதவிகள் கிடைத்து வருவதாகவும். ஆனால் எதிர்க் கட்சியினர் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்குப் பல குறுக்கு வழி களில் ஈடுபட்டுவருவதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

ஆளும் அரசை நீக்கி பொதுத் தேர்தல் நடத்தப்பட்டால் பொ.ஐ. முன்னணியைச் சேர்ந்த பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேசிய ஐக்கிய முன்னணியுடன் இணைந்து கொள்வார்கள் என அவர் கூறியுள்ளார்.





வவுனியாவில் இடம்பெற்ற "உப்பில் உறைந்த உதிரங்கள்" திரைப்பட வெளியீட்டு விழாவில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தேசிய துணைப் படை மகளிர் படையணித் தளபதி கோதை திரைப்பட ஒளிநாடாவை வெளியிட்டு வைக்க முதற்பிரதியை தமிழர் விடுதலைக் கூட்டணியின் வன்னி மாவட்ட தலைவர் ச. குலதேவராஜா பெற்றுக் கொள்வதனையும் ஊடகவியலாளர் கனகரவி வெளியீட்டுரை நிகழ்த்துவதனையும், படத்தில் காணலாம்

படப்பிடிப்பு:- ஆ. ச. பாஸ்கரன். வவுனியா செய்தியாளர்.

# சிம்பாவ்வேக்கான உதவிகளை நிறுத்த அமெரிக்கா முடிவு

(லண்டன்)

சிம்பாவ்வே சனாதிபதி அந்நாட்டில் வெள்ளையர்களுக்கு சொந்தமான விவசாய நிலங்களை சுவீகரித்ததைத் தொடர்ந்து அந் நாட்டின் மீதான எதிர்ப்பு உணர்வு களை ஐரோப்பிய ஒன்றியமும் ஏனைய மேலைத்தேய நாடுகளும் வெளிப்படுத்தியுள்ளன.

இந்த நிலையில் கடந்த வெள்ளியன்று அமெரிக்கா சிம்பாவ்வே மீது பொருளா தாரத் தடையை வித்திருக்கின்றது.

இதன் கீழ் நிதியுதவித் தொகை களும் உற்பத்திப் பொருட்களும் சிம்பாவ்வேக்கு அனுப்பப்பட மாட்டாது எனவும் ஆபிரிக்கக் கண் டத்தில் சனநாயகத்தை மீறுகின்ற நாடு சிம்பாவ்வே என்று அமெ ரிக்கா விமர்சித்துள்ளது.

# செர்பிய பிரதமர் 'சுட்டுக் கொலை

(லண்டன்)

செர்பிய பிரதமர் சோரான் டிஞ் ஞின் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

50 வயதான இவர் நேற்று முன்தினம் இனம் தெரியாதவர் களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். இதன் பின்னர் அரசாங்கம் அங்கு அவசர காலநிலையைப் பிரகடனப்படுத்தியுள்ளது.

# ரொனிபிளேயரின் அரசியல் வாழ்வில் நெருக்கடி ஈராக் பிரச்சினையால் வந்த வினை

(லண்டன்)

ஈராக் மீதான யுத்தத்திற்கு சரியான சட்டவலு இருப்பதாக பிரிட்டிஷ் அரசு தொடர்ந்தும் கூறிவருகின்றது.

அத்துடன் சர்வதேச சட்டத்திற்கு மாறாக தான் செயற்படப்போவ தில்லை என ரொனிபிளேயர் கூறி யுள்ளார்.

இவ் விடயம் தொடர்பாக தனது சட்ட ஆலோசகர்களிட மிருந்து எவ்வாறான ஆலோசனை தனக்குக்கிடைத்துள்ளது என்பதை அவர் கூறவில்லை.

ஈராக் சனாதிபதி சதாம் ஹுசைன் மீதான பிரிட்டிஷ் பிரதமரின் எதிர்ப்புப் பிரச்சாரமும் அவரது அரசியல் வாழ்க்கையை சங்கடத்துக்குள்ளாக்கியுள்ளது. சர்வ தேச சட்டத்தை மீறும் வகையில் ஈராக் மீதான தாக்குதல் இடம் பெறுமாயின் அது பிளேயருக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத் தும் என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை 'வீட்டோ' அதி காரத்தை பயன்படுத்தும் அச்சுறுத் தலை பிரான்ஸ் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என கனடா வலியுறுத்தியுள்ளது. அதற்கமை வாக ஆயுதக் களைவை மேற் கொள்ள ஈராக் சனாதிபதிக்கு கால அவகாசம் வழங்கும் தனது யோசனையை பிரான்ஸ் கருத்தில் கொள்ள வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

இதேவேளை ஈராக் மீதான யுத்தத்தை அங்கீகரிக்கும் அமெ ரிக்காவின் புதிய தீர்மானத்திற்கு எதிரா ரஷ்யா 'விட்டோ' அதி காரத்தைப் பயன்படுத்தப் போவ தாக அச்சுறுத்தியுள்ள நிலையில் தீர்மானத்திற்கு ஆதரவு வழங்கு மாறு அமெரிக்க சனாதிபதி புஷ், ரஷ்ய சனாதிபதி விளாடிமிர்புட்டி னிடம் தொலைபேசி மூலமாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.


தீர்மானத்திற்கு எதிராக ரஷ்யா 'விட்டோ' அதிகாரத்தைப் பயன் படுத்துவதை தடுக்க முடியும் என அமெரிக்க சனாதிபதி கருதிய போதும் பிரான்ஸ் அதன் 'வீட்டோ' அதிகாரத்தைப் பயன்படுத்துவதை தடுக்கமுடியும் என்ற நம்பிக்கை அவருக்கு இல்லை என்றும் வெள்ளை மாளிகை வட்டாரங்கள் கூறியுள்ளன.

தீர்மானத்திற்கு ஆதரவாக 09 நாடுகளின் ஆதரவைப் பெறும் ராஜதந்திர முயற்சிகளை அமெ ரிக்க தீவிரப்படுத்தியுள்ள தாகவும் அதன் மூலம் அங்கோலா, கெம ரோன், கினி ஆகிய ஆபிரிக்கா நாடுகளின் ஆதரவைப் பெறு வதில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள தாக வெள்ளைமாளிகை வட்டா ரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

# வெற்றி மனை நிலையத்திற்கான அடிக்கல்லை கெல்ஹேசன் நாட்டினார்!

(அலுவலக செய்தியாளர்)

வடக்கு-கிழக்கு துரித மனிதாபிமான புனர்வாழ்வு உப குழுவால் (சிரான்) முன்மொழியப்பட்ட வெற்றிமனை மகளிர் உளவளத் துனை நிலையத்தின் அடிக்கல் நாட்டு விழா நேற்றுப் பகல் 11.15 மணிக்கு கிளிநொச்சி கனகபுரம் எட்டாம் பண்ணையில் நடைபெற்றது.



பெண்கள் புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் சுதர்சினி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பொதுச்சுடரினை கிளி. கரைச்சி பிரதேச செயலர் பொன் நித்தியானந்தன் ஏற்றிவைக்க தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி ஏற்றிவைத்தார்.

சிறப்பு விருந்தினர் களாக வருகைதந்த நோர்வே அரசின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் கெல்ஹேசன், இலங்கைக்கான நோர்வேத் தூது வர் ஜோன் வெஸ்பேர்க் ஆகி யோர் கலந்து கொண்டதுடன், நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் கெல்ஹேசன் அவர்கள் வெற்றிமனைக் கட்டடத் திற்கான அடிக்கல்லினை நாட்டி வைத்தார். நிகழ்வில் தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப் பாளர் சோ. தங்கன், விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் நாயகம் புலித் தேவன், கிளி மாவட்ட தொழில் நுட்பக் கல்லூரித் தலைவர் பொன் விநாயகமூர்த்தி, வெற்றிமனை நிலைய உறுப்பினர் ஏ.வீ.கே. மாணிக்கம், கே.வி.கே. திருலோக மூர்த்தி மற்றும் பொது அமைப்பு அதிகாரிகள், பொதுமக்கள் கலந்து நிகழ்வினை சிறப்பித்தனர். (சோ)

### அரசியல்...

ரக அதிகாரிகள் மூவரும் கலந்து கொண்டனர்.

ஒன்றரை மணிநேரம் இச்சந்திப்பு இடம்பெற்றது.

முன்னதாக நேற்றுக் காலை 10.00 மணிக்கு உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சி விளையாட்டு மைதானத்தில் வந்திறங்கிய நோர்வே அரசின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் கெல்ஹேசன் மற்றும் அவரது குழுவினரையும் தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் அவர்களும், விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் நாயகம் அவர்களும் வரவேற்று அழைத்துச் சென்றனர். (சோ)

### துணுக்காய்...

பணிமனை நோக்கியும் சென்றடையவுள்ளதுடன் உரியவர்களுக்கு மகஜர் கையளிக்கப் படவும் உள்ளன.

இப்பேரணியில் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மேற்படி சங்கத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (07)

### தமிழர் மீதான...

டத்துக்கு ஆதரவு தெரிவித்தும் இந்த ஹர்த்தால் நடாத்தப்படவுள்ளது.

மேலும், விடுதலைப் புலிகளின் வாணிபக் கப்பல் மீதான தாக்குதலின்போது பதினொரு பேர் வீரச்சாவடைந்தமைக்குக் கண்டனம் தெரிவித் துமே இந்த ஹர்த்தால் நடை பெறவுள்ளது.

### இராணுவத்தினரின்...

வும், வவுனியா பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இயல்பு நிலையைக் குழப்பும் வகையில் ஏதோவொரு அமைப்பு செயற்படுவதாகவும் அவ்வமைப்பின் வேண்டுகோளை ஏற்று ஹர்த்தாலை அனுஷ்டிப்பது சட்டத்திற்கு முரணானது எனவும் அவ்வாறு செயற்படுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வர்த்தக நிலையங்களை பூட்டுமாறோ அல்லது அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டாம் என்றோ யாராவது தடுத்தால் உடனடியாக வவுனியா பாதுகாப்பு படைத் தலைமை அலுவலகத்திற்கு அறிவிக்குமாறும் நேற்று முன்தினமும், நேற்றுக் காலையும் படையினர் ஒலி பெருக்கி மூலம் அறிவித்துக் கொண்டிருந்தனர். எனினும் படை யினரின் அறிவிப்பை பொருட் படுத்தாது முழு அளவில் ஹர்த் தால் அனுஷ்டிக்கப்பட்டது.

பாடசாலைகளுக்கு மாணவர்களோ, ஆசிரியர்களோ செல்லவில்லை. அலுவலகங்களும் இயங்கவில்லை. அனைத்து வர்த்தக நிலையங்களின் முன்பாக கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டு கதவடைப்பும் இடம்பெற்றது. அனைத்து உள்ளூர் போக்குவரத்து சேவைகளும் ஸ்தம்பிதமடைந்தன.

எனினும், ஓமந்தைக்கான போக்குவரத்து சேவையும், வெளி மாவட்டங்களுக்கான போக்குவரத்துச் சேவையும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடைபெற்றன. அத்தோடு மாவீரர்களுக்கு வீர வணக்கம் செலுத்தும் பதாகைகளும் நகரில் ஆங்காங்கே கட்டப்பட்டிருந்தன

நகரின் மத்தியிலும், நகரை அண்டிய பகுதிகளிலும் மேலதிக பொலிசார் குவிக்கப்பட்டிருந்தனர். (10)

### ஐ.நா. மனித...

யாடினர்.

அதனையடுத்து தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் அவர்கள் ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுத் தலைவர் இயன் மாட்டீன் அவர் களுக்கு நினைவுப் பரிசு வழங்கிக் கௌரவித்தார்.

இதனையடுத்து கிளிநொச்சி காவல் பணிமனைக்கு விஜயம் மேற்கொண்ட இயன் மாட்டீன் அவர்களை கிளி காவல் பணிமனைப் பொறுப்பாளர் இரஞ்சித் குமார் வரவேற்று காவல் பணிமனைச் செயற்பாடுகள் குறித்து விளக்கமளித்தார். கிளிநொச்சிப் பிரதேசம் இராணுவ ஆக்கிரமிப்பிற்குட்பட்டபோது இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களின் மனித எலும்புக் கூடுகளையும் பணிமனையில் அவர் பார்வையிட்டதுடன் அதன் விபரங்களையும் கேட்டறிந்தார்.

பின்னர் சீர்த்திருத்தப் பள்ளிக்கு சென்ற இயன் மாட்டீன் அவர்கள் சீர்திருத்தப் பிரிவுப் பொறுப்பாளர் நரேன் அவர்களுடன் கலந்துரையாடியதுடன் தடுத்து வைக்கப்பட்டோர்களுடன் தனித் தனியாக கலந்துரையாடி அவர்களது தங்குமிடங்களைப் பார்வையிட்டதுடன் செயற்பாடுகள் குறித்து பூரண திருப்தி தெரிவித்தார். (சோ)

### தலைவர் பிரபா...

மான எமது கப்பல் மூழ்கடிப்பு சம்பவம் பற்றியும், அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றியும், எதிர் வரும் பேச்சுவார்த்தை சம்பந்தமாகவும் சில முக்கியமான விடயங்கள் பற்றியும் கதைத்தோம்.

கேள்வி:யப்பானில் நடைபெறவுள்ள மாநாட்டில் கலந்த கொள்வது குறித்து,

அனேகமாக யப்பானில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றுவோம் என்றுதான் நான் கருதுகின்றேன். என்றாலும் எமது தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களுடன் இன்று நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் சம்பந்தமாகவும், நேற்று கண்காணிப்புக் குழுவினருடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் சம்பந்தமாகவும் கலந்துரையாடி இறுதியான முடிவு இரண்டொரு தினங்களில் எடுப்போம். நோர்வே சமாதான பிரதிநிதிகளைப் பொறுத்த வரையில் வெளிவிவகார பிரதி அமைச்சர் அவர்கள் சொன்னார். இந்தப் பிரச்சினையை நேரடியாக உயர் மட்டத்தில் எடுத்து அவர்களுடன் கதைத்து இதற்கொரு ஆக்கபூர்வமான தீர்வை காணவேண்டும் என்றும், இப்படியான பிரச்சினைகள் இனிமேல் நிகழாத வண்ணம் உத்தரவாதங்களை சிறிலங்கா அரசாங்கத்திடம் பெற வேண்டுமானால் அவர்களுடன் நேரடியாகக் கதைப்பதுதான் நல்லது என்றும் இப்படி பேச்சைப் பகிஷ்கரிப்பது ஒரு எதிர்மறையான விளைவைத்தான் ஏற்படுத்தும் என்றும் ஆலோசனை வழங்கினார்.

ஆகவே, இந்த கருத்தினை எமது தலைவரிடம் எடுத்துச் சென்று அவருடன் கதைத்து அனேகமாக தலைவர் அவர்களும் எம்மைப் பேச்சுவார்த்தைக்கு அனுப்பி வைப்பார் என்றுதான் நான் கருதுகின்றேன்.

**கேள்வி:** திருகோணமலை கடற்பரப்பு சம்பவம் விடுதலைப் புலிகளின் தலைமையினை வெகுவாகப் பாதித்துள்ளதென்றும் தமது எதிர்ப்பை எவ்வாறு வெளிக்காட்டுவது என்றும் ஆராய்ந்து வருவதாக பத்திரிகைகள் தெரிவிக்கின்றனவே.

☐ அதாவது, நாங்கள் ஏற்கனவே கடுமையான ஆட்சேபத்தை சிறிலங்கா அரசாங்கத்திற்குத் தெரிவித்துள்ளோம். கண்காணிப்புக் குழுவிடம் இதையிட்டு முறைப்பாடு செய்திருக்கின்றோம். எங்களைப் பொறுத்தவரையில் இந்தச் சம்பவமானது சர்வதேசக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையின் அதிகாரத்திற் கப்பாற்பட்ட பிரதேசத்தில் நடைபெற்றிருக்கின்றது. அடுத்ததாக கண்காணிப்புக் குழுவின் தலையீடின்றி தன்னிச்சையாக சுயாதீனமாக இவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கின்றார்கள். அது பாரதூரமான சம்பவம். ஆகவே இதையிட்டு நாம் கடுமையான ஆட்சேபனை தெரிவித்துள்ளதுடன் மேற்கொண்டு இப்படிப்பட்ட சம்பவம் நிகழாத வகையில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுடனும், நோர்வே அரசாங்கத்துடனும், சிறிலங்கா அரசாங்கத்துடனும் பேசி சில புதிய ஒழுங்கு முறைகளை செய்வதற்கு நாங்கள் முடிவெடுத்துள்ளோம்.

**கேள்வி:** வடமராட்சியில் விடுதலைப் புலிகளின் அலுவலகங்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளதுடன் வவுனியாவின்வெகுசன அமைப்பு ஒன்றியத் தலைவரும் இராணுவத்தால் மிரட்டப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது இது குறித்து.

எங்களைப் பொறுத்த வரையில் சிறிலங்கா ஆயுதப்படைகள் இப்பொழுது அச்சமடைந்து இருக்கின்றன எமது போராளிகள் இங்கு வரவழைக்கப்பட்டது. அடுத்து ஒரு பதற்ற நிலை அங்கு காணப்படுகிறது.

ஆகவே இப்படியான சில முயற்சிகளில் அவர்கள் ஈடுபடுவதையிட்டு நாங்கள் ஆச்சரியப்படவில்லை. ஆனாலும் சிறிலங்கா ஆயுதப்படைகளின் அடாவடித்தனங்கள், அச்சுறுத்தல்கள் குறித்து நாங்கள் நோர்வே அரசாங்கத்துடனும், கண்காணிப்புக்குழுவுடனும் பேசியுள்ளோம். உடனடியாக சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதன் விபரங்களை நாங்கள் இப்பொழுது தெரிவிக்க விரும்பவில்லை.

**கேள்வி:** போராளிகள் வன்னிக்கு அழைக்கப்பட்டது குறித்து.

போராளிகளின் பாதுகாப்புக் குறித்தும், இன்றைய நெருக்கடியான சூழ்நிலை குறித்தும் அவர்களுக்கு விளக்கம் கொடுப்பதற்காகவே போராளிகள் அழைக்கப்பட்டுள்ளனர். நிலைமை சீரானதும் அவர்கள் மீண்டும் செயற்பெற்ற இடங்களுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படுவார்கள்.

**கேள்வி:** சனாதிபதி கப்பல் விவகாரத்தினையடுத்து புலிகள் ஆயுதக் கப்பல்களை இலங்கைக்கு கொண்டு வருவது தொடர்பாக பேச்சுவார்த்தைகளில் தீவிரமாக ஆராயுமாறு பிரதமருக்கு ஆலோசனை தெரிவித்துள்ளதாக தகவல் வெளிவந்துள்ளது. இது குறித்து.

சிறிலங்கா அரசாங்கம் ஆயுதங்களை கொண்டுவருவது அல்லது தங்களது இராணுவத்தை பலப்படுத்துவது இராணுவ சமநிலை என்ற கோட்பாட்டிற்கு முரணான விடயம். ஆகவே முதல் அவர்கள் ஆயுதங்களைக் கொண்டு வருவதை நிறுத்த வேண்டும். மற்றது விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கொண்டு வருவதோ அல்லது ஆயுதக் கப்பல்களைக் கொண்டு வருவதற்கோ தடை எதுவும் இந்த போர் நிறுத்த ஒப்பந்தத்தில் இல்லை. ஆகவே இந்த பிரச்சினையினை இரண்டு தரப்பும் புதிதாக கதைக்க வேண்டும்.

ஏனென்று சொன்னால் சிறிலங்கா ஆயுதங்களை இறக்குமதி செய்தால், நாங்களும் ஆயுதங்களை கொண்டு வருவது தவிர்க்க முடியாது. அப்போது தான் இராணுவ சமநிலை பேணப்படும். ஆகவே அவர்கள் ஆயுதத்தைக் கொண்டு வருவதை நிறுத்துவதாயிருந்தால் அவர்கள் ஆயுதங்களை இறக்குமதி செய்வதை, பாதுகாப்பு செலவினங்களை முற்றாக குறைக்க வேண்டும். ஆயுதங்கள் இறக்குமதி செய்வதை நிறுத்த வேண்டும். அப்படி நிறுத்தாத பட்சத்தில் எங்களிடம் அப்படியான கட்டுப்பாடுகளைப் போட முடியாது. ஏனென்றால் போர்நிறுத்த ஒப்பந்தத்தின்படி இருதரப்பும் இராணுவ சமநிலையைப் பேண வேண்டும். இல்லாவிடில் போர் நிறுத்தம் நிலைத்து நிற்பது சாத்தியமற்றது.

**கேள்வி:** போர்நிறுத்த உடன்படிக்கையின் போது தீவிரமாக இடம்பெற்ற யுத்தநிறுத்த மீறல் இது என்று தெரிவித்து வந்துள்ளீர்கள். இது தொடர்பாக யுத்தநிறுத்த உடன்படிக்கையில் ஏதாவது மாற்றங்கள் பேச்சுவார்த்தையின் போது கொண்டு வரப்படவுள்ளதா?

போர் நிறுத்த ஒப்பந்தத்தை பொறுத்த வரையில் போர்நிறுத்த உடன்பாட்டில் கடல் நடமாட்டங்கள் சம்பந்தமாகத் தெளிவான வரவிலக்கணங்கள், விதிமுறைகள் இந்த ஒப்பந்தத்தில் இருக்கவில்லை. இது ஒரு பெரிய குறைபாடாக கடந்த ஒரு வருட காலமாக இருந்து வருகிறது. இந்தக் குறைபாட்டை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி சிறிலங்கா கடற்படை புலிகள் மீது சில கட்டுப்பாடுகளை கொண்டு வரமுயற்சி செய்கிறது.

**கேள்வி:** போராளிகள் வன்னிக்கு அழைக்கப்பட்டுள்ளார்கள். இதன் காரணமாக மக்கள் மத்தியில் ஒருவித அச்சநிலை தோன்றுகிறது. மீண்டும் போராளிகள் திரும்பவும் தத்தம் இடங்களில் அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவார்களா?

நாங்கள் தமிழீழ மக்களுக்கு இதை மட்டும் சொல்ல விரும்புகின்றோம். எந்தக் காரணத்தைக் கொண்டும் நாம் மீண்டும் போரை ஆரம்பிக்கப் போவதில்லை. மற்றயது போர்நிறுத்த உடன்பாட்டை நாங்கள் இறுக்கமாகப் பேணுவோம். அமைதியைப் பேணுவோம், இதை நாங்கள் எமது மக்களுக்கு தெளிவாகவும் உறுதியாகவும் சொல்ல விரும்புகின்றோம். மக்கள் அச்சமடையத் தேவையில்லை. (சோ)


## அறிவித்தல்

அமைய அடிப்படையில் ஆட்கள் தேவை

தங்குமிட வசதி, கவர்ச்சியான

கொடுப்பனவுடன் மதிய உணவு இலவசம்

உடனடியாக நேரில் சமுகம் தரவும்

**உப்பு உற்பத்தி நிறுவனம்**

(3014) **பரந்தன்.**


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மார்ச் மாதம் 14ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.